**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 03–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . 1,2,4 முதல் 10 வரை பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 8,10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 1,2 மற்றும் 4 முதல் 7,9 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.510/2022

வா.சா.1 பெரியசாமி த/பெ பொங்கியண்ணன்

**<u>8 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை :–</u>**

1. அறக்கட்டளையில் என்னை எந்த வருடம் செயலாளராக நியமித்தார்கள் என்றால் 2017ம் வருடம் என்னை செயலாளராக நியமித்தார்கள். அறக்கட்டளையில் சிறப்பு தீர்மானங்கள் இந்த வழக்கை பொறுத்து நிறைவேற்றப்பட்டு, மேலும் என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அனுமதித்துள்ளார்களா என்றால் சிறப்பு தீர்மானம் அறக்கட்டளையால்நிறைவேற்றப்பட்டு அதன் பொருட்டு இந்த வழக்கு சம்மந்தமாக நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி சிறப்பு தீர்மானத்தின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

2. அறக்கட்டளையில் எந்த தீர்மானமும் நிறைவேற்றினாலும் மினிட்ஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். மினிட்ஸ் புத்தகத்தையும் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அறக்கட்டளையானது கடந்த 10 வருடங்களாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. 2017 வருடத்திற்க்கு முன்பு அறக்கட்டளை நடந்த வந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு 2010ம் வருடம் முதல் அறக்கட்டளையின் செயல்பாடுகள் எனக்கு தெரியும்.

3. 2010 வருடத்திற்க்கு முன்பு அறக்கட்டளையில் திருக்கோவிலுக்காக என்ன என்ன பணிகள் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் அறக்கட்டளை 75 வருடங்களாக செயல்பட்டு வருகிறது, மேலும் திருக்கோவில் சம்மந்தமாக பணிகள் மேற்படி

அறக்கட்டளை மூலம் செய்திருப்பதாக சொல்லியுள்ளது தவறான ஒன்று என்றால் சரியல்ல.

4. அறக்கட்டளை பொதுமக்கள், திருக்கோவிலுக்கு மற்றும் ஏழைகுழந்தைகள், மாணவர்களுக்கு உதவி செய்தது சம்மந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கபாலீஸ்வரர் கோயில் இந்து அறநிலைதுறைக்கட்டுபாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அறநிலை துறை அறக்கட்டளை நடத்துவதற்க்கு அனுமதி எதுவும் வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை.

5. இந்த வழக்கின் பிரதிவாதிகளான கோயில் அர்ச்சகர்கள் மீது பொதுமக்கள் அறக்கட்டளையில் புகார்களை தெரிவித்துள்ளார்களா என்றால் புகார் தெரிவித்துள்ளார்கள். அந்த புகார்களை கொடுத்ததை அறநிலைத்துறைக்கு அறக்கட்டளையால் அனுப்பபட்டதா என்றால் அந்த புகார்களை அனுப்பியுள்ளோம். அந்த புகார்களை அறக்கட்டளையில் மினிட்ஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிக்கும் என்றால் இல்லை.

6. பொதுமக்கள் புகார் கொடுத்தால் அறநிலைத்துறைக்கு அனுப்பலாம் என்று எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் பிரதிவாதிகள் மீது எந்த ஒரு புகார்களும் தெரிவிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதிகள் அறக்கட்டளையின் மீது செய்திதாளில் அறிவிப்பு வெளியிட்டார்கள் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை.

7. எந்த எந்த செய்திதாளில் அறிவிப்பு வெளியானது என்றால் தினதந்தி, காலைகதிர், தினகரன் ஆகிய நாளிதாள்களில் அறிவிப்பு வெளியானது. மேற்படி அறிவிப்புக்கு மறுத்து அறக்கட்டளை செய்திதாளில் அறிவிப்பு கொடுத்ததா என்றால் இல்லை. மேற்கண்ட செய்திதாளில் அறிவிப்பு வெளிவருவதற்க்கு முன்பு அறநிலைத்துறையில் உள்ள இணைஆணையரிடம் 1ம்பிரதிவாதி வாதி அறக்கட்டளையின் மீது புகார் அளித்துள்ளார்களா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

8. இந்த தாவாவில் என்ன விவரங்கள் சங்கதிகள் சொல்லியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியும். மேற்கண்ட செய்திதாள்களில் என்ன அறிவிப்பு உள்ளது என்ற விவரம் குறிப்பிட்டு தெரியுமா என்றால் பொதுமக்களை ஏமாற்றி அறக்கட்டளை பணம்

வசூலிப்பதாகவும், கோயில் பெயரை சொல்லி அறக்கட்டளையில் உள்ள நபர்கள் தவறாக பயன்படுத்திவருகிறார்கள் என்று செய்திதாள்களில் பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்டது. செய்திதாள்களில் அறக்கட்டளையின் நபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நபர்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை அறக்கட்டளையின் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டிருந்தது.

9. செய்திதாள்களில் அறிவிப்பு வெளிவந்தபிறகு அறக்கட்டளை மீது கலங்கம் உண்டான பிறகு அறக்கட்டளை உறுப்பினர்கள் எதுவும் எழுத்துபூர்வமாக அறக்கட்டளையில் புகார் அளித்தார்களா என்றால் வாட்ஸ் அப், அலைபேசிமூலம் தகவல் கூறியுள்ளார்கள் மற்றும் எழுத்துபூர்வமாகவும் புகார் அளித்துள்ளார்கள். மேற்படி புகார்களை மினிட்ஸ் புத்தகத்தில் தீர்மானத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

10. அறக்கட்டளை உறுப்பினர்கள் யாரும் பிரதிவாதிகள் மீது புகார் அளிக்கவில்லை என்பதாலும், அப்படி புகார் அளித்திருந்தால் மினிட்புத்தகத்தில் தீர்மானம் நிறைவேற்றி பிரதிவாதிகள் மீது வழக்கு தொடர்ந்து இருப்பார் என்றால் சரியல்ல. அறக்கட்டளை உறுப்பினர்கள் அறக்கட்டளை மீது கலங்கம் ஏற்பட்டது என்று பிரதிவாதிகள் மீது புகார் கொடுக்காத நிலையில் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்லது என்று சொன்னால் சரியல்ல.

11. இந்த வழக்கில் வழக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாவாவில் அறக்கட்டளையின் மீது என்னவிதமான கலங்கம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எவ்வளவு நஷ்டஈடு அறக்கட்டளைகோரியுள்ளது என்றால் ரூ.10,00,000/− ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்க்கு முன்பு எவ்வளவு நஷ்டஈடு கோரப்பட்டது என்றால் ரூ. 50,00,000/− ஆகும். என்ன காரணத்திற்காக நஷ்டஈடு குறைத்து ரூ.10,00,000/−த்திற்க்கு பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் பணம் முக்கியமில்லை அதனால் நஷ்டஈடு தொகை குறைக்கப்பட்டது.

12. பிரதிவாதிகள் அறக்கட்டளைக்கு இடையூறு செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்ட நிலையில் அது சம்மந்தமாக எந்த ஒரு பரிகாரமும் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. இந்து அறநிலைத்துறை பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் மீது அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதநிலையில் பிரதிவாதிகள் பொதுமக்களிடம் அதிக பணம் பறித்து வருகிறார்கள் என்று தாவாவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு அறக்கட்டளை எந்தவொரு எழுத்துபூர்வமான அதிகாரம் கொடுக்கவில்லை என்பதால் நான் வழக்கு தாக்கல் செய்யவோ, அதன்பொருட்டு சாட்சியம் அளிக்கவோ எனக்கு எவ்வித சட்டபூர்வமான முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை